1981 ஏப்ரல் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பொதுப்படையானது. பொதுவான துணை வினாவைத்தான் கேட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலேயும் உள்ள பள்ளியிலும் கல்லூரியிலும் ஒவ்வொரு விதமான கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கூடுமானவரையில் ஆங்காங்கிருக்கின்ற தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் அதிலே ஈடுபட்டு குறைபாடுகள், கலவரங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள். அதற்காகத் தான் ஒவ்வொரு ஊரிலும் கல்லூரிகள், பள்ளிகள் பொறுத்த வரைக்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பிரதி நிதிகள் அடங்கிய சங்கங்களை வைத்து அவற்றின் மூலமாக அவற்றைத் தீர்ப்பதற்கு பொதுவான முறைதான் இருந்து வருகிறது. இந்த இரண்டு ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியராக வருவதிலே போட்டி ஏற்பட்டு அவர்களே நேரடியாகத் தலையிடாமல் மாணவர்களை ஈடுபடுத்தி விட்டார்கள். இருதயராஜ் என்ற தமிழ் வித்துவான் 23—2—1976 முதல் 14—4—1976 வரையில் அவர் மிசா கைதியாக இருந்தார் என்றும் தெரியவருகிறது. ஆகவே ஆசிரியர்களுக்குள்ளே ஏற்பட்ட தகராறுதானே தவிர வேறு எந்தவிதமான தகராறும் இல்லை.

முத்துக் குளிக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டம்

*வினா எண். 854—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துக்குளி தொழிலாளி முத்து எடுக்கும் போது இறந்து விட்டால் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கு குளி தொழிலாளி சங்கு எடுக்கும்போது இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு ரூபாய் 5,000 உதவித் தொகை அளிப்பது போல முத்துக் குளி தொழிலாளி முத்துக் குளிக்கும் போது இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கும் 1978 ஆம் ஆண்டு தமிழ் நாடு மீனவர் நலம் மற்றும் துயர் துடைப்பு நிதி விதிகளின்படி ரூபாய் 5,000 உதவித் தொகை அளிக்க வேண்டும் என்று சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கும் தொழிலாளர்கள் முத்துக் குளிக்கும்போது, ஜாஸ் என்ற ஆங்கிலப் படத்திலே வருவதைப் போன்ற திமிங்கலங்களும் ரோஜர் மீன் போன்றவைகளும் தாக்குகின்றன. அப்போது அவர்கள் அவைகளால் பிடித்துக் தின்னப்பட்டாலோ

அல்லது உடல் ஊனமுற்றாலோ அவர்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு இல்லை. எனவே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமா ? அப்படி இறக்கின்றவர்களைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் அரசிடம் வந்து சேரவில்லை. முத்துக் குளிப்பே 1961-க்கு பிறகு நடைபெறவே இல்லை.

(முற்பகல் 9-10)

இருபதாண்டு காலமாக முத்துக் குளிப்பது என்பதே நடைபெறவில்லை. இனிமேல்தான் நடைபெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப் போன்ற அப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டால் அப்படிப்பட்ட ஆபத்து வராமல் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக் குளிக்கும் தொழிலாளிகள் முத்துக்களை எடுத்துக் கொண்டு வரும்பொழுது அதில் பெரும்பகுதி முத்துக்களைக் கழிவு என்று சொல்லிக் கழித்துக் கட்டிவிடுகிறார்கள். அப்படிக் கழித்துக் கட்டிய முத்துகளை மீண்டும் அவ்வதிகாரிகள் வேறு வியாபாரிகளுக்கு விற்றுப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். பொருளாதார ரீதியாகப் பார்த்தால் முத்துக் குளிக்கின்றவர்கள் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ? இது சம்பந்தமாக ஒரு பெட்டிஷனை திரு. திருமாறன் அவர்கள் அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் அந்தப் பகுதியிலுள்ள காவல்துறையினரும் கண்காணித்து வருகிறார்கள். குறிப்பாக முத்துக் குளிக்கும் சமயத்தில் இப்படிப்பட்ட கண்காணிப்பு மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குறைபாடுகள் இருக்குமேயானால் அந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, முத்துக் குளிப்பது கடந்த இருபதாண்டுகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 24]

அதற்கு என்ன காரணம்? முத்துக் கிடைக்கவில்லையா? பாண்டிய நாட்டில் முத்துக் குளிப்பது என்பது நீண்டகாலமாக, தொன்றுதொட்டு இருக்கும் பழக்கம். அதை மீண்டும் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? மேலும், புதிதாக முத்துக்களை வளப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் முத்துக் குளிக்கும் நிலைமைகள் ஏற்படக்கூடும். மெச்சூர் ஆகவில்லை என்று சொல்கிறார்கள். மெச்சூர் ஆன காலம் வந்த பிறகுதான் முத்துக் குளிக்கும் நிலைமைகள் ஏற்படும் என்று சொல்கிறார்கள். கடலிலே முத்துக்களை விளைவிக்கின்ற முயற்சிகளும் நடைபெறுகின்றன. செயற்கை முத்துக்களை உருவாக்குவதற்காக, முத்துச் சிப்பிகளை சேகரித்து சினையாக்கி மறுபடியும் விட்டு முத்துக் குளிக்கின்ற ஆராய்ச்சியும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் இதுபற்றிய விவரங்களை யெல்லாம் அளிக்கலாம்.

லெவி மூலம் அரசு வசூலித்த நெல், அரிசியின் அளவு.

*வினா எண். 855—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இதுவரை அரசு வசூலித்த லெவி நெல் அரிசியின் அளவு எவ்வளவு?

(ஆ) லெவி முறை நீடிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 21—3—1981 வரை அரசு வசூலித்த லெவியின் அளவு

நெல் 57,680 மெட்ரிக் டன்கள்.

அரிசி 17,450 மெட்ரிக் டன்கள்.

(ஆ) ஆம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவி முறையினால் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. ஆகவே, அரசே நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.